**O.S.No. 260/2018**

**DW1 : குமரேசன்** தேதி 07.04.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை

என் தாத்தா பெயர் மாரப்பகவுண்டர். பாட்டி பெயர் மாராயம்மாள். என் தாத்தாவிற்கு பூர்வீகம் ஈரோடு குமலன்குட்டை. என் தாத்தா மாரப்பகவுண்டருக்கு ஈரோடு குமலன்குட்டையில் பூர்வீகமாக 1.09 ஏக்கர் இருந்தது. என் தாத்தா மாரப்பகவுண்டருக்கு என் அப்பா லோகநாதனும் பெரியப்பா தம்பிராஜனும் வாரிசுகள். பெண் வாரிசுகள் இல்லை. வாதி என் சகோதரி. 1 ம் பிரதிவாதி என் அண்ணன். வாதி எங்களுக்கு மூத்தவர். நாங்கள் 3 பேரும் சிறுவயதாக இருக்கும் போதே எங்கள் தந்தை சாலை விபத்தில் இறந்து விட்டார். என் தாத்தா மாரப்பகவுண்டர் 1972 ல் இறந்துவிட்டார். என் அப்பா 1987 ல் இறந்துவிட்டார். என் தாத்தா இறந்தபின்னிட்டு என் பாட்டி மாராயம்மாள் பெரியப்பா தம்பிராஜன் என் அப்பா ஆகியோர் பூர்வீக பொது குடும்ப சொத்துகளை கூட்டாக அனுபவித்து வந்து பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். 19.11.84 ல் 3 பேரும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலமாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். அது வாசாஆ 4. வாசாஆ 4 பிரிவினையில் என் அப்பாவிற்கு ரீ ச எண் 370/1 காலையில் தாவா பி செட்டியூல் 1 ம் அயிட்ட சொத்தில் 87 ½ சென்ட் பிரிவினை ஆனது என்றால் சரிதான். பி செட்டியூல் 2 ம் அயிட்ட சொத்து 1.09 ஏக்கர் என் அப்பாவிற்கு பிரிவினை ஆனது என்றால் சரிதான். தாவா 3 ம் அயிட்ட சொத்து என் அப்பாவிற்கு பிரிந்தது என்றால் சரிதான். தாவா 3 ம் அயிட்ட சொத்தான வீடு தவிர 18**X** 98 அளவுள்ள வீட்டு மனையிடமும் அதில் உள்ள கட்டிடமும் என் தந்தைக்கு பிரிந்தது என்றால்சரிதான். தற்போது அந்த இடம் உள்ளது. அந்த இடத்தை குறித்து ஆவணம் எழுதவில்லையா என்றால் எழுதப்பட்டுள்ளது. அந்த இடத்தை பொறுத்து தானசெட்டில்மென்ட்

பத்திரத்தை எங்கள் சகோதரி எனக்கும் என் சகோதரருக்கும் எழுதி கொடுத்துவிட்டார். வாசாஆ 4 பாகப்பிரிவினையில் சொல்லப்படாத மற்றொரு ச.எண்.306 என் பெரியப்பா லோகநாதனும் நாங்களும் வாய்மொழியாக பிரித்து கொண்டோமா என்றால் பஞ்சாயத்து பாகப்பிரிவினை என்ற பத்திரம் மூலம் பிரித்து கொண்டோம். சர்வே எண் 306 தான் தாவா ஏ செட்டியூல் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா ஏ செட்டியூல் சொத்து போக ச எண் 306 ல் உள்ளது போக மீதி உள்ள சொத்து தான் தாவா பி செட்டியூல் ஆக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா ஏ மற்றும் பி செட்டியூல் 1 முதல் 4 அயிட்ட சொத்துகளும் எங்களுக்கு பூர்வீக சொத்துகள் என்றால் சரிதான். பி செட்டியூல் 5 ம் அயிட்ட சொத்தையும் அதை ஒட்டியிருக்கும் சொத்துகளையும் ச எண் 66 ல் என் அம்மா என் பெரியம்மா கண்ணம்மாள் ஒரு ரங்காத்தாள் ஒரு சரஸ்வதி ஒரு ராமாயம்மாள் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகிய 6 பேரும் சேர்ந்து 20.4.1981 ல் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த கிரைய ஆவணம் மேற்படி 6 பேரும் சேர்ந்து வாங்கிய கிரைய ஆவணம் என்றால் சரிதான் அது வாசாஆ 5. மேற்படியார் 6 பேர்களுக்கு இடையே கிரையம் வாங்கிய சொத்தை பொறுத்து கறார் செய்துகொண்டார்களா என்றால் பிரிவினை செய்து கொள்ளவில்லை. யார் யார் எந்த பக்கம் என்று ஒதுக்கீடு செய்யவில்லை. தாவா 6 ம் அயிட்ட சொத்தையும் அதை ஒட்டியுள்ள பகுதியையும் சேர்த்து ச எண் 288 மற்றும் 289 என் அம்மாவும் என் பெரியம்மா கண்ணம்மாளும் சேர்ந்து கூட்டாக வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் கிரைய ஆவணம் தான் அது வாசாஆ 6. வாசாஆ 6 ல் வாங்கிய சொத்தை என் அம்மாவும் கண்ணம்மாளும் பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் வாய்மொழியாக பிரிவினை செய்து கொண்டார்கள். வாய்மொழியாக பிரிவினை செய்து கொண்டதில் தாவா 6 ம் அயிட்ட சொத்து என் அம்மாவிற்கு பிரிவினை ஆனது என்றால் சரிதான். வாதிக்கு திருமணம் ஆகும் போது என் வயது 21. அப்போது நான் **MBA** படித்து கொண்டிருந்தேன். எனக்கும் வாதிக்கும் இடையே எவ்வளவு வயது வித்யாசம் என்றால் 2 **½** வயது வித்யாசம். எனக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் இடையே 1 வயது வித்யாசம். என் தந்தை 37 வயதில்

இறந்துவிட்டார். என் தாய் மாமா பொறுப்பில் நாங்கள் வளர்ந்தோம். **KSR college** ல் **MBA** படித்தேன். 1ம் பிரதிவாதி 12 ம் வகுப்பு படித்திருக்கிறார். வாதி 8 ம் வகுப்பு வரை படித்திருக்கிறார். வாதியினுடைய கணவர் பெயர் சதீஷ்குமார். சதீஷ்குமார் விபத்தில் அடிபட்டு 4 – 5 வருடங்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டார். 3 -4 மாதங்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டார். அவர் குடிப்பழக்கத்திற்கு மறுவாழ்வு மைய சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றால் சரியல்ல. சதீஷ்குமார் இறந்து 5 வருடம் ஆகிறது. அவர் இறக்கும் போது அவர் வயது 48. மது பழக்கத்தினால் ஏற்பட்ட நோயால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் சகோரிக்கு கணவர் வகையில் சொத்துகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல சொத்து உள்ளது. எங்கு உள்ளது என்றால் பவானி தாலுக்கா ஓடத்துறையில் 12 ஏக்கர் உள்ளதாக கேள்விபட்டேன். என் சகோதரி வாதிக்கு கணவர் வகையில் சொத்துகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் சகோதரி வாடகை வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல அவருடைய சொந்த வீட்டில் குடியிருக்கிறார். வாதியின் கணவர் கடன் வாங்கியதில் அதனை கட்ட முடியாமல் போய்விட்டதாக சொல்லியிக்கிறேன். சதீஷ்குமார் எவ்வளவு கடன் வாங்கியிருந்தார் என்றால் ரூபாய் 1 கோடி 40 லட்சம் வட்டியுடன் சேர்த்து கடன் வாங்கியிருந்தார். எந்த வருடம் என்றால் 2010 -2017 வரை 7 வருடமாக பல நபர்களிடம் கடன் வாங்கியிருந்தார். அந்த கடனை நான் தான் கட்டினேன். 7 – 8 நபர்களிடம் வாங்கியிருந்ததை கட்டியிருக்கிறேன். அவ்வாறு கடனை நான் கட்டியதாக ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

( வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)